# பொதுக்காலம் 16ஆம் வாரம் - ஞாயிறு

# இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

“நல்ல ஆயன் நானே” என்று நம்மை பாதுகாப்புடன் வழிநடத்த அழைப்பு விடுக்கும் பொதுக்காலம் 16ம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடனே அழைக்கிறோம்

ஆயன் என்பவன் ஆடுகளை மேய்ப்பவனாக மட்டுமல்ல; அன்பையும் அரவணைப்பையும் ஆடுகளுக்கு அளிப்பவனாக இருக்க வேண்டும். எனவே தான் நல்லாயன் என்னும் சொல் அகராதிக்குள் அமைந்துள்ளது. இருள் நிறைந்த பாதையில் இறைவன் ஏற்றிய தீபத்தில், அவரின் வார்த்தைகள் எனும் விண்மீன் வெளிச்சத்தில், கைகோர்த்து நம்மை இறைவன் நடத்திச் செல்கிறார் ஒரு நல்லாயனாய்.

இன்றைய முதல் வாசகத்தில், “என் மேய்ச்சலுக்கு உட்பட்ட ஆடுகளை சிதறடிக்கும் மேய்ப்பர்களுக்கு ஐயோ கேடு!” என்று முழங்குகிறது இறைவனின் குரல். இன்றைய சூழலிலும் இறைவனின் மந்தைகள் மதம், ஜாதி, பொருளாதாரம் என்று பல்வேறு காரணங்களால் சிதறடிக்கப்படுகின்றது. ஆடுகளின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது. ஆடுகள் என்று குறிப்பிடுவது மக்களாகிய நாம்தான். தவறான பாதைகள் நம்மேல் திணிக்கப்படும்போது ஆயனில்லா ஆடுகளைப் போல் தான் நாம் விழிக்கிறோம், தவிக்கிறோம். இதையே இன்றைய நற்செய்தி வாசகத்தில் அவர்கள் “ஆயரில்லா ஆடுகளை போல் இருந்ததால் அவர்கள் மேல் பரிவு கொண்டு அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார்” என்று காண்கிறோம்.

ஆடுகளுக்காகத் தன்னையே கரைப்பவன் நல்லாயன்;

தன் வாழ்வுக்காக ஆடுகளை வதைப்பவன் இவ்வுலக (தலைவன்) ஆயன்.

இத்தகைய தலைவர்கள் தலைகளில் இறைக்கரம் ஞானத்தை போதிக்கவேண்டும். ஆடுகளை பேணிக்காக்க நான் மேய்ப்பர்களை நியமிப்பேன். இனி அவை அச்சமுறா; திகிலுறா என்கிறார் ஆண்டவர்.

எனவே “காலங்கள் மாறும்; கோலங்கள் மாறும்; காட்சிகள் மாறும்; ஆட்சிகளும் மாறும்; இறையாட்சி மண்ணில் கோலோச்சும்” அத்தகைய எதிர்காலத்தை அனுபவிக்கப் போகிறோம் என்ற நம்பிக்கையில் இத்திருப்பலியில் இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. “நல்ல ஆயன் நானே” என்றவரே எம் இறைவா!

உம் மந்தைகளாகிய எம்மை நல்வழி பாதையில் நடப்பிக்க நீர் தேர்ந்தெடுத்த எம் திருச்சபை தலைவர் மற்றும் பணியாளர்களை வழிநடத்தவும் அவர்களுக்குத் தேவையான உடல் ஆன்ம நலன்களையும் தந்திட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

2. “நான் மேய்ப்பர்களை நியமிப்பேன் என்று உறுதியளித்தவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்களைத் ஆசீர்வதித்து, ஞானத்தை அளித்து, அன்பு நேரிய வழியில் நடந்து, அனைவரையும் சமமாக பாவித்து, மக்கள் முன்னேற்றத்தில் அக்கறைப்படும் தலைவர்களாய் உருவாக்கிட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

3. ஆயரில்லா ஆடுகள் மேல் பரிவு கொண்டவரே எம் இறைவா!

இவ்வுலக வாழ்க்கையில் கவனிப்பாரற்று, பரிவுகாட்ட ஆளின்றி தனிமையில் வாடும் மக்களை கண்கொண்டு பாரும். அவர்கள் மேல் அக்கறை கொள்ளும் மனங்களை எம்மில் உருவாக்கிட வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

4. நலன்களால் எம்மை நிரப்புபவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய மழை பொழிந்து விவசாயம் சிறக்கவும், நீர் வளம் அதிகரிக்கவும், குடும்பங்களில் அமைதி, சந்தோஷம் நிறைந்திருக்கவும், திருமணம், குழந்தை வரம், வேலைவாய்ப்பு வேண்டி காத்திருப்போர் உமதருளால் பெற்றுக் கொள்ளவும் வேண்டும் என ஆண்டவரைக் கெஞ்சி மன்றாடுவோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com